தேசிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம்

ஒன்றிய அரசை கண்டித்து 234 சட்டமன்ற தொகுதிகளிலும் பொதுக்கூட்டம்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும் சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

சென்னை, மார்ச் 3: தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க நிர்ப்பந்தம், இந்தி திணிப்பு, கல்வி நிதி தராதது, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள சட்டமன்ற தொகுதி தோறும் கண்டனப்பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், 'தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்க மறுக்கிறது. அதனால் தமிழகத்திற்கு கல்விக்கான நிதி வழங்க முடியாது' என்று அண்மையில் அறிவித்தார். ஒன்றிய அமைச்சரின் இந்த பேச்சுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்தன. தற்போது மும்மொழிக் கொள்கை விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளது. திமுக உள்ளிட்ட கட்சிகள் ஒன்றிய அரசுக்கு எதிராக போராட்டங்களில் இறங்கியுள்ளன.

இந்த நிலையில் திமுக தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் தனது 72வது பிறந்தநாளை கொண்டாடினார். அப்போது தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுப்பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்று கூறினார்.

இந்நிலையில் திமுக இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

திமுக இளைஞர் அணியின் மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72வது பிறந்தநாள் காணும் திமுக தலைவர்-தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள். தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் சட்டமன்ற தொகுதி வாரியாக பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. நாளை சென்னை தென்மேற்கு திமுக சார்பில் தியாகராயநகர் தொகுதியில் கோடம்பாக்கம் (ஐந்து விளக்கு) பொதுக்கூட்டம் நடக்கிறது. இதில் பேச்சாளர்கள் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, நா.அருண் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

வருகிற 10ம் தேதி வரை தொகுதி வாரியாக இந்த பொதுக்கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொகுதி வாரியாக பேசுவோர் பட்டியலை உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழகம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் இந்த பொதுக்கூட்டம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

5 மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவு

₹122 கோடி ஒதுக்கீடு

அரசாணை வெளியீடு

சென்னை, மார்ச் 3: தமிழ்நாட்டில் 5 அரசு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவு அமைப்பதற்கு ₹122 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் பொது சுகாதார ஆய்வகம் அமைக்கப்படும் என கடந்த 2024-25ம் ஆண்டின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார். அதன் அடிப்படையில், 5 மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் 3 மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் உள்ளிட்டவைகள் அமைப்பதற்காக ₹122 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில், கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, மணப்பாறை அரசு மருத்துவமனை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை, செங்கோட்டை அரசு மருத்துவமனை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில் தலா 50 படுக்கை வசதிகளுடன் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்ட உள்ளது. அதே போல், கும்பகோணம் அரசு மருத்துவனை, தென்காசி அரசு மருத்துவமனை, காங்கேயம் அரசு மருத்துவமனை ஆகிய 3 மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் ஏற்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

வேளாண் பட்ஜெட் ஆலோசனைக் கூட்டம்

▶ உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், நேற்று, தலைமைச்செயலகத்தில் 2025-26ம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், வேளாண்மை துறை அரசு செயலாளர் தட்சிணாமூர்த்தி, துறை இயக்குநர் முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் குமாரவேல்பாண்டியன், வேளாண் வணிகவரித் துறை ஆணையர் ஆபிரகாம், சர்க்கரைத் துறை இயக்குநர் அன்பழகன், வேளாண் பல்கலை துணை வேந்தர் கீதாலட்சுமி, தலைமைப்பொறியாளர்கள் முருகேசன், சந்திரசேகர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எந்த அடிப்படையில் தொகுதி மறுவரையறை?

ஒன்றிய அரசு தெளிவுபடுத்த வேண்டும்

கனிமொழி எம்.பி கேள்வி

சென்னை, மார்ச் 3: திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி தனது எக்ஸ் வலைதளம் பதிவில் கூறியிருப்பதாவது:

கோயம்புத்தூரில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "ப்ரோ ரேட்டா" அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படுவதாக கூறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அதன் அர்த்தம் என்ன? மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் பாராளுமன்ற தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டால், தமிழ்நாடு 10க்கும் மேற்பட்ட இடங்களை இழக்க நேரிடும். அதேசமயம் உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்கள் அதிக இடங்களைப் பெறும்.

பொறுப்பான நிர்வாகத்திற்கான வெகுமதிகளைப் பெறுவதற்குப் பதிலாக, நமது அரசியல் குரல் குறைக்கப்படும் என்று இப்போது நமக்குச் சொல்லப்படுகிறது. மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளை நிர்ணயம் செய்ய முடியாது. இது ஒரு மாநிலத்தின் பொருளாதார பங்கீடு, ஆட்சியின் தரம் மற்றும் கூட்டாட்சி சமத்துவத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்றிய அரசு தனது திட்டத்தைத் தெளிவாக விளக்க முன் வர வேண்டும்.

அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமாகா பங்கேற்காது

ஜி.கே.வாசன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 3: தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்ட அறிக்கை:

தமிழக அரசு கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் பங்கேற்காது. மும்மொழிக் கொள்கை மற்றும் நீட் நுழைவுத் தேர்வு சம்பந்தமான ஒன்றிய அரசின் கல்வி நிலைப்பாட்டிற்கு பெரும்பாலான பெற்றோர்களும், மாணவர்களும் ஆதரவாகவே இருக்கின்றனர்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து மத்திய அரசின் எந்த அதிகாரபூர்வமான அறிவிப்பும் வராத நிலையில், தமிழ்நாட்டிற்கு தொகுதிகள் குறையும் என்று கூறுவது உண்மை நிலைக்கு எதிரானது. எனவே, வருகிற மார்ச் 5ம் தேதி நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் பங்கேற்கவில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது'** மற்றும் **'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 20–03–2025** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **20–03–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை** செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 19–03–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	21-02-2025 தேதிப்படி நிலுவைத் தொகை
1.	TCHHL04040001001072 73 & TCHIN04040 0010010869 7	திரு.கஜேந்திர கொல்லப்பள்ளி & திருமதி.ரம்யா	கடன் கணக்கு எண். TCHHL0404000100107273 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 34,24,097/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100108697 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ.1,11,916/– ஆக மொத்தம் ரூ.35,36,013/– & 08–02–2024	மனை எண் 11க்கு ரூ.15,00,000/– மனை எண் 12–க்கு ரூ.15,00,000/–	மனை எண் 11க்கு ரூ.1,50,000/– மனை எண் 12–க்கு ரூ.1,50,000/–	கையக	ஒப்பந்த எண் TCHHL0404000100107273 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.3994253/– மற்றும் ஒப்பந்த எண் TCHIN0404000100108697 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.151375/– மொத்தம் ரூ. 4145628/–

அசையா சொத்தின் விவரம்: காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், வட்டம்பாக்கம் கிராமம், ச.எண்.93/33 மற்றும் ச.எண்.93/18, பட்டா எண்.1258 மற்றும் 1259–ன் படி புதிய சர்வே எண்.93/18A மற்றும் 93/33A–ல் உள்ள ஒஎம்எஸ் க்ரீன் சிட்டியில் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.11 மற்றும் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.12 ஆகிய இரண்டும் சேர்ந்து மொத்தம் 3180 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள் மற்றும் அளவீடு:** மனை எண்.11: **வடக்கில்:** 23 அடி சாலை – 53 அடி, **தெற்கில்:** மனை எண்.12 53 அடி, **கிழக்கில்:** மனை எண்.10 – 30 அடி, **மேற்கில்:** காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி, **எல்லைகள் மற்றும் அளவீடு:** மனை எண்.12: **வடக்கில்:** மனை எண்.11 – 53 அடி, **தெற்கில்:** 23 அடி சாலை – 53 அடி, **கிழக்கில்:** மனை எண்.13 – 30 அடி, **மேற்கில்:** காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி.செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள சொத்து.

2.	TCHHL04040001000842 81	திரு. C முகமது ஹனீப்,. திருமதி ரேஷ்மாஷாஹதியா C S	Rs. 2,25,96,684/- 09-11-2022	ஃபிளாட் எண்.S1 ரூ.45,00,000 மற்றும் ஃபிளாட் எண்.S2 ரூ.35,00,000/– மற்றும் ஃபிளாட் எண்.S3 ரூ.40,00,000	ஃபிளாட் எண்.S1– ரூ.4,50,000/– மற்றும் ஃபிளாட் எண்.S2 – ரூ.3,50,000/– மற்றும் ஃபிளாட் எண்.S3– ரூ.4,00,000/–	கையக	ரூ.30229024/– (ரூபாய் மூன்று கோடியே இரண்டு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருபத்து நான்கு மட்டும்)

அசையா சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட அட்டவணை–'A' சொத்து (மொத்த பரப்பளவு). சென்னை மாநகராட்சி எல்லைக்குள், புலியூர் கிராமம், எழும்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தின், சர்வே எண்கள். 125/1 மற்றும் 125/4, டி.எஸ். எண். 6/6, பிளாக் எண். 10 இல் அடங்கிய, பழைய கதவு எண். 35/1, முந்தைய கதவு எண். 35/5 மற்றும் தற்போது கதவு எண்கள். 101/1 மற்றும் 101/2, பாரி தெரு, புலியூர், சூளைமேடு, சென்னை–600094 இல் 2395 சதுரடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** பாரி தெரு, **தெற்கில்:** கால்வாய், **கிழக்கில்:** பழைய கதவு எண். 35, புதிய கதவு எண்.99, **மேற்கில்:** பழைய கதவு எண்.35/2, புதிய கதவு எண்.102. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–36 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்–35 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–74 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–66 அடி. மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை 'B'** சொத்து:(சொத்து இதன்மூலம் உரிமை மாற்றப்பட்டது) ஃபிளாட் எண் S2 என்ற, இரண்டாம் தளத்தில் 558 சதுரடி அடிமட்டப் பரப்பளவுடன் **அட்டவணை 'A'** குறிப்பிட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 248 சதுரடி மற்றும் ஃபிளாட் எண்.S3 என்ற இரண்டாம் தளத்தில் 830 சதுரடி அடிமட்டப் பரப்புடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 370 சதுரடி மேலும் ஃபிளாட் எண்.S1 என்ற இரண்டாம் தளத்தில் 1019 சதுரடி அடிமட்டப் பரப்புடன் அட்டவணை 'A' குறிப்பிட்ட சொத்தில் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 454 சதுரடி. கட்டிட பரப்பளவு 558 சதுரடி பொதுப் பரப்புகள் உட்பட தூண் தளத்தில் ஒரு மேற்கூரையிட்ட கார் நிறுத்துமிடம் உட்பட, அடோன் ஆக பெயரிடப்பட்ட அபார்ட்மெண்ட்.

3.	TCHHL0490 0001000663 61 & TCHIN04900 0010006642 7	திரு.ரேவதி B, M/S. ப்ரெதினிக்வியர், திரு. பாலாஜி M	கடன் கணக்கு எண்: TCHIN0490000100066427–ன் படி ரூ.44,956/– நிலுவை உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. மேலும் கடன் கணக்கு எண்: TCHHL0490000100066361–ன் படி தொகை ரூ.29,69,284 /– நிலுவை மற்றும் உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது மொத்தத்தில் ரூ.30,14,240/– & 19–12–2023	ரூ. 24,00,000/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சம் மட்டும்)	ரூ. 2,40,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHIN0490000100066427– ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.107106/– மற்றும் ஒப்பந்த எண் TCHHL0490000100066361–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.3661002/– ஆக மொத்தம் ரூ.3768108/–

அசையா சொத்து விவரம்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், எண்.152, வட்டம்பாக்கம் கிராமத்தில் (D.T.C.P. vide LP/DTCP எண்.256/2019, தேதி:30.05.2019) பட்டா எண்.1259, சர்வே எண். 93/33 உள்ள ஒஎம்எஸ் கிரீன் சிட்டி எனப் பெயரிடப்பட்ட லே அவுட்டில் 1602 ச.அடி பரப்பளவு கொண்ட மனை எண்.16 மற்றும் 1602 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.17 என மொத்த பரப்பான 3204 ச.அடி உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் காலி வீட்டு மனை உள்ளடங்கிய சொத்து. எல்லைகள்: மனை எண்.16 இன் **எல்லைகள்: வடக்கில்:** 23 அடி சாலை, **தெற்கில்:** சர்வே எண் 93/34 கொண்ட காலி நிலம், **கிழக்கில்:** மனை எண்.15, **மேற்கில்:** மனை எண்.17, **அளவீடு:** வடக்கு பக்கம்: 36 அடி, தெற்கு பக்கம்: 36 அடி, கிழக்கு பக்கம்: 44.6 அடி, மேற்கு பக்கம்: 44.6 அடி என மொத்த பரப்பின் அளவு 1602 ச.அடி. மனை எண்.17 இன் **எல்லைகள்: வடக்கில்:**23 அடி சாலை, **தெற்கில்:**சர்வே எண். 93/34 கொண்ட காலி நிலம், **கிழக்கில்:**மனை எண்.16, **மேற்கில்:**மனை எண்.18, **அளவீடு:** வடக்கு பக்கம் 36 அடி, தெற்கு பக்கம் 36 அடி, கிழக்கு பக்கம் 44.6 அடி. மேற்கு பக்கம் 44.6 அடி என 1602 ச.அடி பரப்பு. மனை எண்கள்.16 மற்றும் 17 (1602 + 1602) ஆகியவற்றின் மொத்த பரப்பான 3204 ச.அடியானது சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் காஞ்சிபுரம் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

4.	TCHIN04040 0010012641 0 & TCHHL0404 0001001260 43	திரு. ரிச்சர்டு ராஜதுரை கிருஷ்ணன் திருமதி. செல்வி R	கடன்கணக்கு எண். TCHHL0404000100126043–ன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1969127/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100126410–ன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.96656/– மொத்தம் ரூ.2065783/– & 23–08–2023	ரூ.17,10,000/– (ரூபாய் பதினேழு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ.1,71,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து ஓராயிரம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHHL0404000100126043–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.2589599/– மற்றும் ஒப்பந்த எண் TCHIN0404000100126410–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.162784/– ஆக மொத்தம் ரூ.2752383/–

அசையா சொத்தின் விவரங்கள்: ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, எண்.43, வடமங்கலம் கிராமம், மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வே எண். 223/1 & 223/2, மனை எண்.7, DTCP அனுமதி எண்.280/2006–ன் படிஅமைந்துள்ள ஸ்ரீனிவாசா V நகர், காஞ்சிபுரத்தில்1906 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள மனை எண்.7–ன் அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய நிலம் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கு:** மனை எண்.6, **தெற்கு:** காலி நிலம், **கிழக்கு:** காலி நிலம், **மேற்கு:** 30 அடி லேஅவுட் சாலை. **அளவீடு: கி**ழக்கு மேற்காக வடக்குப் பகுதியில் – 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் 60.1 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பகுதியில்33.6 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் 30 அடி. மொத்தம் 1906 ச.அடி, சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

5.	TCHHL04900 00100229679 & TCHHF04900 00100229683 & TCHIN04900 00100231306	திருமதி. வேளாங்கண்ணி கிளாடிஸ் பாபு ஜெஸ்லின்	TCHHL0490000100229679 என்ற ஒப்பந்த எண்ணின் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.6,52,601/–மற்றும் TCHHF0490000100229683 என்ற ஒப்பந்த எண்ணின் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ.17,72,433/–மற்றும் TCHIN0490000100231306 என்ற ஒப்பந்த எண்ணின் படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ.1,44,964/– ஆக மொத்தம் நீங்கள் செலுத்த வேண்டியது ரூ.25,69,998/– & 09–05–2024	ரூ. 20,00,000/– (ரூபாய் இருபது லட்சம் மட்டும்)	ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண் TCHHL0490000100229679–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.775644/– மற்றும் ஒப்பந்த எண் TCHIN0490000100231306–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.171504/– மற்றும் ஒப்பந்த எண் TCHHF0490000100229683–ன் படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.1993336/– ஆக மொத்தம் ரூ.2940484/–

அசையா சொத்து விவரம்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம், சாலமங்கலம் கிராமம், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண். 226/3, புதிய சர்வே எண்: 226/108, லேஅவுட் அனுமதி LLP/DTCP.875/1995 மற்றும் உட்பிரிவு அனுமதி எண்.03/2022–2023–ன் படி அமைந்துள்ளஸ்ரீகிருஷ்ணா நகர் மற்றும்ஸ்ரீதுர்கா சித்தர் நகரில் மனை எண்.13A&12A–ல் உள்ள 1175 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பக்கம் அடங்கிய நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.13B &12B, **தெற்கில்:** பூங்கா, **மேற்கில்:** மனை எண்.12டி, **கிழக்கில்:** 30 அடி சாலை, **அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்:** 47 அடி, **கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்:** 47 அடி, **வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்:** 25 அடி, **வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்:** 25 அடி.

6.	10022896 & TCHHF0404 0001000677 43	திரு. வெங்கடேசன் K, திருமதி. V லட்சுமி	ஒப்பந்த எண் 10022896 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.8726428/– மற்றும் ஒப்பந்த எண் TCHHF0404000100067743 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.1546253/– & 16–06–2022	ரூ. 80,00,000/– (ரூபாய் எண்பது லட்சம் மட்டும்)	ரூ. 8,00,000/– (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்)	கையக	ஒப்பந்த எண். TCHHF0404000100067743 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.2324594/– மற்றும் ஒப்பந்த எண் 10022896 படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.12897103/– ஆக மொத்தம் ரூ.15221697/–

அசையா சொத்து விவரம்: மனை எண். 8, பழைய கதவு எண். 16, புதிய கதவு எண். 168, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை–600624 என்ற, சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலியூர் கிராமத்தில் அடங்கிய, பாதை உட்பட 1732.75 சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கு 865 சதுரடியுடன் சேர்த்து கார் நிறுத்துமிடத்துடன், 1180 சதுரடி பரப்பளவு உள்ளடக்க கட்டமைப்பு தரை தளத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி மேலும் **எல்லைகள்: வடக்கில்:**டயனமிக் அபார்ட்மெண்ட்ஸ், **தெற்கில்:** S. லோகநாதனுக்கு சொந்தமான சொத்து, **கிழக்கில்:**லதிப் பாயின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு சொந்தமான கதவு எண் 168/1 சொத்து, **மேற்கில்